Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 81/2020**

**Deposition of PW.3 (LW.6)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சென்றாய பெருமாள் | ஜாதி | : | |
| த/பெ | : | ரெங்கசாமி | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | பழைய செம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 62/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

(எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை**

நான் பழைய செம்பட்டியில் குடியிருந்துகொண்டு டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். வாகன விபத்தில் இறந்துபோன பாலசுப்பிரமணி எனது பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 4, 5 வருடத்திற்கு முன்பு இரவு சுமார் 10.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது பக்கத்து வீட்டில் உள்ள நபர்கள் வாகன விபத்தில் பாலசுப்பிரமணிக்கு ஆத்துப்பட்டி பிரிவில் வாகன விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நானும், பாலசுப்பிரமணி தயார், தகப்பனார், அவரது மனைவி ஆகியோருடன் சென்று சம்பவ இடத்தில் சென்று பார்த்தபோது அவருக்கு தலையின் நெற்றியிலும், தலையின் பின்பகுதியிலும் காயம்பட்டு காணப்பட்டார். பிறகு அவரை 108 ஆம்புலன்சில் அனுப்பி வைத்தார்கள். வாகன விபத்தில் இறந்துபோன பாலசுப்பிரமணி அவரது இருசக்கர வாகனத்தில் வந்தபோது அதே ரோட்டில் லைட் சிக்னல் போடாமல் அந்த ரோட்டின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்தது. அதனால் பாலசுப்பிரமணியன் அந்த லாரி மீது மோதிவிட்டதாக சொன்னார்கள். முதலில் பாலசுப்பிரமணியனை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக

கொண்டு செல்லும் வழியில் அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றும், எவ்வாறு ஏற்பட்டது என்றும் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்த நேரம், தேதி ஆகியவை உங்களுக்கு தெரியாது என்றால் 5 வருடம் ஆகிவிட்டதால் தெரியாது. லாரி ரோட்டின் கிழக்கு புறமாக நின்றதா அல்லது மேற்கு புறமாக நின்றுகொண்டிருந்ததா என்றால் கிழக்கு புறமாக நின்றுகொண்டிருந்தது. நீங்கள் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த நேரம் என்னவென்றால் இரவு 10.00 மணி ஆகும்.

நீங்கள் சென்று பார்த்தபோது லாரி சமிக்கைகளுடன் நின்றகொண்டிருந்ததா அல்லது விபத்து ஏற்பட்டதால் சமிக்கைகள் இல்லாமல் இருந்ததா என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 81/2020**

**Deposition of PW.4 (LW.7)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரமசிவம் | ஜாதி | : | |
| த/பெ | : | ராமன் செட்டியார் | தொழில் | : | கண்டக்டர் |
| கிராமம் | : | பழைய செம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 47/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

(எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை**

நான் பழைய செம்பட்டியில் குடியிருந்துகொண்டு கண்டக்டராக வேலை பார்த்து வருகிறேன் என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் சாட்சியாக போடப்பட்டுள்ள கையெழுத்துக்களில் முதலாவது கையெழுத்து என்னுடையது தான். பார்வைமகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் **(அ.சா.ஆ.2/PW.4)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் சேர்ந்து பாண்டியராஜன் என்பவர் கையொப்பம் செய்தார். மேற்படி கையெழுத்தை கடந்த 4, 5 வருடத்திற்கு முன்பு இரவு சுமார் 10.00 மணியளவில் ஆத்துப்பட்டி பிரிவில் வைத்து விபத்து சம்பவம் நடந்த இடத்தில் வைத்து செம்பட்டி காவல்நிலையத்தில் இருந்து வந்த போலிசார் அந்த இடத்தில் வரைபடம் வரைந்து விசாரித்து எங்களிடம் கையெழுத்து கேட்டார்கள். நாங்கள் கையெழுத்து செய்தோம். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் கையெழுத்து செய்தது எந்த தேதி என்றால் 06.06.2025 அல்லது 2026 ல் கையொப்பம் வாங்கினார்கள். நீங்கள் கையெழுத்து செய்தது எந்த நேரம் என்றால் இரவு 10.00 மணி ஆகும். போலிஸ் விசாரணையில் 06.06.2020 ஆம் தேதி காலை 08.00 மணியளவில் கையெழுத்து பெற்றதகா கூறிவிட்டு தற்போது

முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் கையெழுத்து செய்ததில் என்ன எழுதியிருந்தது என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 81/2020**

**Deposition of PW.5 (LW.5)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாண்டியராஜன் | ஜாதி | : | |
| த/பெ | : | மதுரை வீரன் | தொழில் | : | டெய்லர் |
| கிராமம் | : | பழைய செம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 42/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

(எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை**

நான் பழைய செம்பட்டியில் குடியிருந்துகொண்டு டெய்லர் வேலை பார்த்து வருகிறேன் என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் சாட்சியாக போடப்பட்டுள்ள கையெழுத்துக்களில் இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். பார்வைமகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் **(அ.சா.ஆ.3/PW.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் சேர்ந்து பரமசிவம் என்பவர் கையொப்பம் செய்தார். மேற்படி கையெழுத்தை கடந்த 06.06.2020 ஆம் தேதி காலை சுமார் 08.00 மணியளவில் ஆத்துப்பட்டி பிரிவில் வைத்து விபத்து சம்பவம் நடந்த இடத்தில் வைத்து செம்பட்டி காவல்நிலையத்தில் இருந்து வந்த போலிசார் அந்த இடத்தில் வரைபடம் வரைந்து விசாரித்து எங்களிடம் கையெழுத்து கேட்டார்கள். நாங்கள் கையெழுத்து செய்தோம். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் கையெழுத்து செய்தது ஆத்துப்பட்டி பிரிவிவா அல்லது ஆத்துப்பட்டி பிரிவுக்கு தென்புறமா என்றால் ஆத்துப்பட்டி பிரிவை தாண்டி கையெழுத்து வாங்கினார்கள். நீங்கள் கையொப்பம் செய்த பேப்பர் வெள்ளை பேப்பரா அல்லது டைப் செய்யப்பட்டிருந்ததா எனறால் டைப் செய்யப்பட்டிருந்தது. நீங்கள் கையொப்பம்

செய்ததில் என்ன விபரம் எழுதியிருந்தது என்றால் நியாபகமில்லை. நீங்கள் உள்ளுர் என்பதால் காவல்நிலையத்திற்கு வரச்சொல்லி கையொப்பம் வாங்கினார்கள் என்றும், நீங்கள் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

சம்பவ இடத்திற்கு மேற்கு பக்கம் யார் வீடு உள்ளது என்றால் பால் வியாபரம் செய்பவர் வீடு உள்ளது, யார் என்று தெரியாது. இவ்வழக்கின் குற்ற எண் தெரியுமா என்றால் தெரியாது. நீங்கள் சம்பவ இடத்தில் இல்லை என்றும், இறந்தவர் உங்கள் ஊர்க்காரம் என்பதாலும் மற்றும் போலிசார் கேட்டுக்கொண்டதாலும் பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor